அ) கீழ்க்காணும் புராணக் கதையை சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆக்கியவற்றுடன் நிறுத்தற்குறிகளுக்கேற்ப வாசித்திடுக.

## படகோட்டியின் பட்டாபிஷேகம்

கங்கைக் கரையில், குகன் வழக்கம்போல படகைத் தொட்டுக் கும்பிட்டு, ஆற்று நீரில் காலை அலம்பிக்கொண்டு படகில் ஏறினான். இராமன், சீதை, லட்சுமணனைச் சுமந்து சென்ற புனிதப் படகல்லவா அது!

படகில் அன்றைய தினம் நாலைந்து புதிய நபர்கள் வந்தார்கள். அவர்களில் ஓர் இளைஞன், குகனிடம் பேச்சுக் கொடுத்தான்.

"அயோத்தியில் இராமர் பட்டாபிஷேகக் கொண்டாட்டம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நீ என்னடாவென்றால் இங்கே படகில் துடுப்பு இழுத்துக் கொண்டிருக்கிறாயே! ஏன், உன்னை இராமர் அழைக்கவில்லையா? நீ அந்த வைபவத்தில் கலந்துகொள்ளத் தகுதியில்லாதவனா?" என்றான். குகன் அமைதியாகச் சொன்னான். "ஐயா! இராமபிரானுக்கு என் நினைவு வராதிருக்குமா? "உன்னோடு சேர்த்து ஐவரானோம்" என்று என்னைத் தன்னுடைய நான்காவது தம்பியாகப் பாவித்தாரே! அவருக்கா என்னை மறக்கும்?" என நெகிழ்ச்சியுடன் சொன்னான்.

"அப்படியென்றால் ஏன் உனக்கு அழைப்பு விடுக்கவில்லை?"

"பொதுவாக ஒரு திருமணம், ஒரு விசேஷம் என்றால் நெருங்கினவர்களுக்கெல்லாம் ஒரு சில பொறுப்புகளைக் கொடுத்து நிறைவேற்றச் சொல்வார்கள் இல்லையா, அதுபோல எனக்கும் இராமர் பட்டாபிஷேகத்துக்கு வரும் மக்களை, அக்கரையில் இருந்து படகில் அழைத்துவரும் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருமணத்தின்போது இதுபோன்ற பொறுப்பை நிருவகிக்கும் ஒருவரால் மணமேடைக்குச் சென்று திருமணத்தைப் பார்க்க முடியாத நிலைமை ஏற்படும். அதுபோலதான் எனக்கும். நான் மானசீகமாக இராமர் பட்டாபிஷேகத்தைப் பார்க்கிறேன். என் இராமர் என்னைப் பார்க்கிறார்," என்று புன்னகைக்கிறான் குகன்.

அந்த இளைஞன் மட்டுமின்றி, பயணித்த அனைவருக்குமே குகனுடைய பதிலால் கண்களில் நீர் திரண்டது.

மூலம்: இணையம்

LIVEWORKSHEETS

1. அயோத்தியில் என்ன கொண்டாட்டம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது?

______________________________________________________________________

2. யார் இராமர் பட்டாபிஷேக வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை?

______________________________________________________________________

3. ஏன் குகனுக்கு இராமர் அழைப்பு விடுக்கவில்லை?

______________________________________________________________________

4. நீ குகனாக இருந்திருந்தால் என்ன பதில் கூறியிருப்பாய்?

______________________________________________________________________

5. பட்டாபிஷேகம் எனும் சொல்லின் பொருளை எழுதுக.

______________________________________________________________________

LIVEWORKSHEETS